பக்கங்கள்:-25

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 24 | புதன்கிழமை | 07.02.2024 | அதிர்வு 190

## வெடி விபத்தில் குடும்பஸ்தர் பலி



(செ.தி. பெருமாள்)

அவிசாவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதொல பிரதேசத்தில் பழைய இரும்புகளை

06▶





# ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடர் இன்று

## ஜனாதிபதி ரணில் தலைமையில் ஆரம்பம் கொள்கைப் பிரகடன உரையும் இடம்பெறும்

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இன்று வைபவ ரீதியாகத் தொடங்குகின்றது.

இது தொடர்பான ஒத்திகை நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்றது. தேவி பாளிகா கல்லூரி மாணவியர் உள்ளிட்ட பலர் இந்த ஒத்திகையில் பங்கேற்றனர்.

அரசமைப்பின் 33ஆவது உறுப்புரையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று முற்பகல் 10.30 மணிக்கு நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பின் கொள்கைப் பிரகடனத்தை முன்வைக்கவுள்ளார்.

ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு வருகைதரும் நிகழ்வை மிகவும் எளிமையான முறையில் நடத்துமாறு அவர் வழங்கிய ஆலோசனைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், இதற்கமைய மரியாதை வேட்டுக்கள் தீர்த்தல் மற்றும் வாகனத் தொடரணி என்பன இடம்பெறாது எனவும் நாடாளுமன்ற படைக்கலச் சேவிதர் குஷான் ஜயரத்ன தெரிவித்தார்.

06▶

## இங்கு மீண்டும் பொருளாதார வீழ்ச்சி ஏற்படாத நிலையை உருவாக்குவோம்

### வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உறுதி



நாடுகளுக்கிடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் வீழ்ச்சியடையாத நிலைக்குக் கொண்டு செல்வதற்குஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டம் வலுப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி

06▶





இலங்கை அரசியலில் இப்போது அதிகம் பேசப்படும் விடயம் எதுவென்று கேட்டால் ஜே.வி.பியின் இந்திய விஜயம் என்று எல்லோரும் பதில் கூறி விடுவர்.

தங்களுக்குப் பரம வைரியாக இருந்த – சீனச் சார்புக் கட்சியான – ஜே.வி.பிக்கு அதிரடியாக மோடி அரசு கொடுத்த முக்கியத்துவமும், 'கௌரவமும்' பலரையும் மூக்கில் விரலை வைக்க வைத்தன என்பது உண்மைதான்.

06▶



# காலநிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்த பிராந்தியத்தின் ஒத்துழைப்பு மிக அவசியம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்க தெரிவிப்பு

காலநிலை அனர்த்தங்களுக்குத் தீர்வுகளைத் தேடுவதற்குப் பிராந்திய மற்றும் சர்வதேச அளவிலான முயற்சிகளுக்கு இலங்கை முழுமையான ஆதரவை வழங்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதற்காக இலங்கையில் சர்வதேச காலநிலைப் பல்கலைக் கழகம் ஒன்றை அமைக்கத் தீர்மானித்திருப்பதாகவும், ஆசிய மற்றும் ஆபிரிக்க வலயங்களின் காலநிலை சவால்களுக்கு ஈடுகொடுப்பதற்கான முக்கியமான பணியை அதனால் ஆற்ற முடியும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும், அண்மையில் டுபாயில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச மாநாட்டில் ஆசிய வெப்ப வலயத்தை கார்பன் உமிழ்வு பிரதேசமாக மாற்றுவது தொடர்பிலான இலங்கையின் முன்மொழிவையும் அவர் நினைவு கூர்ந்தார்.

கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற தெற்காசிய ஹைட்ரோமெட் மன்றம் 2024 இன் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

உலக வங்கி மற்றும் சுஐஆநுளு ஆகியவற்றின் ஒத்துழைப்புடனான ஹைட்ரோமெட் மன்றம், வலயத்தின் ஒத்துழைப்பு, திறனை வலுவூட்டல் மற்றும் மேம்படுத்தல் உள்ளிட்ட நோக்கத்துடன் "வலயத்தின் ஒத்துழைப்பை திறத்தல்" என்ற தொனிப்பொருளின் கீழ் நேற்று முதல் நாளை வரையில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஆசிய வலயத்தை கார்பன் உமிழ்வு பிராந்தியமாக மாற்றுவது நிலையான அபிவிருத்தித் திட்டங்களில் முதலீடு செய்வதற்குத் தனியார் துறையை ஊக்குவிக்கும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

அந்த வகையில், பிராந்தியம் முழுவதிலும் உள்ள வாய்ப்புகளை ஆராய்வதற்காக இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கமான ஐழுசுயு இன் செயற்பாடுகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார். வெப்ப வலயத்தின் காலநிலை மாற்றம் தொடர்பான முன்முயற்சிகள் குறித்து அறிக்கையிடுவதற்கு இலங்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய நாடுகளின் நிபுணத்துவ குழுவொன்று நிறுவப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஊழுஏஐனு-19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக சவால்களை எதிர்கொண்ட போதிலும், இலங்கை காலநிலை அறிவியல் அமைப்புகளை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக தெற்காசியா, காலநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளை எதிர்கொள்வதால், காலநிலை மாற்றத்தின் சவால்களுக்கு தீர்வு காண பிராந்திய ஒத்துழைப்பின் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

காலநிலை மாற்றம் காரணமாக குறைந்த வருமானம் கொண்ட நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2 சதவீதம் வரை குறையக்கூடும் என்பதால் பொருளாதார பாதிப்புக்கள் குறித்து கவனம் செலுத்தி அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவசரத் தேவையையும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

இலங்கையில் அண்மையில் எதிர்பாராத வகையில் மழைவீழ்ச்சி கிட்டியிருந்தமை தொடர்பில் நினைவுகூர்ந்த ஜனாதிபதி, இமயமலையில் பனி மலைகள் உருகும் அபாயம் இலங்கை உட்பட பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளையும் பாதிக்கும் என்றும் கூறினார்.

தெற்காசியா ஹைட்ரோமெட் மன்றத்தின் இணைத் தலைவரும், பூட்டானின் தேசிய நீரியல் மற்றும் வானிலை ஆய்வு மையத்தின் பணிப்பாளருமான கர்மா தப்சு, உலக வங்கியின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் டினா உமாலி டெயினிங்கர், இலங்கைக்கான ஐக்கிய இராச்சிய உயர்ஸ்தானிகர் ஆண்ட்ரூ பேட்ரிக், உலக வங்கியின் தெற்காசிய பிராந்திய ஒருங்கிணைப்புப் பணிப்பாளர் செசில் ப்ரூமன் மற்றும் உலக வானிலை ஆய்வு அமைப்பின் பொதுச் செயலாளர் செலஸ்டெ சாலோ உள்ளிட்டோரும் உள்நாட்டு , வெளிநாட்டு பிரதிநிதிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.













# மீனவர்களின் பிரச்சினைகளை தீர்க்க சீமானும், விஜய்யும் முன்வரவேண்டும்

## கடல் தொழிலாளர் சமாச செயலாளர் அ. அன்னராசா கோரிக்கை

**“தமிழ்நாடு மற்றும் வடக்கு, கிழக்கு மீனவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானும், புதிதாக கட்சி தொடங்கியுள்ள விஜய்யும் முன்வரவேண்டும். வடக்கு கடல் தொழிலாளர் சமூகம் சார்பாக இந்த கோரிக்கையை விடுக்கின்றோம்.”**

**- இவ்வாறு ஊற்காவற்றுறை கடல் றொழிலாளர் சங்க சமாசங்களின்செயலாளர் அ.அன்னராசா தெரிவித்தார்.**

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“தமிழ்நாட்டில் இருக்கிற ஈழத் தமிழருக்காகவும் எங்களது வாழ்விற்காகவும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்ற நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானுக்கு வட இலங்கை கடற்றொழிலாளர்கள் தாழ்மையான ஒரு வேண்டுகோளை உரிமையோடும் உணர்வோடும் விடுக்கின்றோம்.

நாங்கள் தமிழ்நாட்டு தொப்புள் கொடி உறவோடு ஒன்றுபட்டுப் பயணிக்க ஆவலாக இருக்கின்றோம். ஆனால் இரண்டு நாட்டு தொப்புள்கொடி உறவுகளுக்கும் இடையே தடையாக இருக்கின்றன தமிழ்நாட்டைச் சேர்ந்த 2500 இழுவை மடிப் படகுகள் ஆகும்.

இரண்டு அரசாங்கங்களின் சார்பிலும் 2016 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் 5 ஆம் திகதி இந்திய தலைநகர் டில்லியில் வைத்து தடை செய்யப்பட்ட இழுவை மடி முறைமையை நிறுத்துவதாக அறிவித்திருந்தார்கள். ஆனால் இன்றும் அது நிறுத்தப்படவில்லை. தொடர்ந்தும் இந்த படகுகள் எல்லை தாண்டி சட்டவிரோத தொழிலிலேயே ஈடுபடுகிறார்கள். இந்த சட்ட விரோத தொழிலை நிறுத்துவதற்கு அண்ணன் சீமான் தலைமையேற்று இந்த பிரச்சினையைத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏனென்றால், மீனவர்களுக்காக சீமான் இந்தியாவிலேயே பேசிக் கொண்டிருக்கிறார். மீனவர் கிராமங்களில் அவர் மிகவும் பலமாக இருக்கிறார் என்ற வகையிலேயே சீமான் அவர்களே உங்களை உரிமையோடு நாங்கள் கேட்கின்றோம். வடக்கு, கிழக்கு தமிழர்களான நாங்கள் உங்களது தலைமையிலே இரண்டு நாட்டு மீனவர்களுடனும் பேசி இதற்கு ஒரு சமூகமான தீர்வு எட்டத் தயாராக இருக்கிறோம்.

இரண்டு அரசாங்கங்களினாலும் வடக்குத் தமிழர்கள் கைவிடப்பட்ட நிலையிலே வாழ்வாதாரங்கள் இழந்த நிலையிலே மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். யுத்தம் முடிவடைந்தும் கடல் தொழிலாளர்களது பிரச்சினைகளையும், வாழ்வாதாரத்தையும் இலங்கை அரசாங்கம் கணக்கில் எடுக்கவில்லை. அதனால் தான் சீமான் நாம் தமிழர் கட்சி ஊடாக இந்தப் பிரச்சனையை கையிலே எடுக்க வேண்டும்.

இதேபோல். புதிதாக தமிழ்நாட்டு வெற்றி கழகம் என கட்சியை ஆரம்பித்திருக்கும் நடிகர் விஜய்யிடமும் இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

வடக்கு, கிழக்கு கடல் தொழிலாளர்களான நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்றோம். இரண்டு நாட்டு மீனவர்களும் ஒற்றுமையாக சகோதரத்துவத்தோடு மீன்பிடியில் ஈடுபட நாங்கள் தயாராகி இருக்கின்றோம்.

நீங்களும் இந்தப் பிரச்சனையில் கரிசனை கொண்டு இருநாட்டு மீனவர்களையும் தடை செய்யப்பட்ட தொழில் முறையை முற்றாக நிறுத்தி பாரம்பரிய தொழில் முறையிலேயே தொழில் செய்து வாழ விரும்புகின்றோம்.

இதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும் என நாங்கள் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மற்றும் புதிதாக கட்சி தொடங்கி இருக்கின்ற விஜய்யிடம் வடக்கு கடல் தொழிலாளர் சமூகம் சார்பாக வேண்டிநிற்கின்றோம்.”– என்றார்.

# ஜனாதிபதி ரணில் இவ்வாரம் ஆஸ்திரேலியாவுக்கு விஜயம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த வாரம் ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்து சமுத்திர மாநாட்டில் பங்கேற்பதற்காக அவர் அங்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது தெரிவித்தார்.

மேற்படி மாநாடு ஆஸ்திரேலியாவின் தலைநகர் பேர்த்தில் இந்த மாதம் 9 ஆம் மற்றும் 10 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் ஜனாதிபதி முக்கிய உரையொன்றையும் நிகழ்த்த உள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தப் பயணத்தின் போது, ஆஸ்திரேலியப் பிரதமர், ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட பிரமுகர்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

# தேசிய மக்கள் சக்திக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல்



தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தேசிய மக்கள் சக்தியை பதிவு செய்துள்ள முறைமை சட்டவிரோதமானது எனவும் இது தொடர்பில் சமர்ப்பணங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்குமாறும் கோரி உயர்நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வினிவித பெரமுனவின் செயலாளர் சட்டத்தரணி நாகானந்த கொடிதுவக்குவினால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வினிவித பெரமுனவை அரசியல் கட்சியாக பதிவு செய்வதை நிராகரித்து தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்ட தீர்மானத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிப் பேராணை மனு மீதான விசாரணையின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் நகர்த்தல் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்துள்ள வினிவித பெரமுனவின் செயலாளர் சட்டத்தரணி நாகானந்த கொடிதுவக்கு, ஜே.வி.பியின் பிரிவொன்றான தேசிய மக்கள் சக்தியை அரசியல் கட்சியாக பதிவு செய்துள்ளமை சட்டத்திற்கு முரணானது என தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 103 இன் இரண்டாம் இலக்க சரத்துக்கு அமைய, ஒரே கட்சியின் வெவ்வேறு பிரிவுகளை அரசியல் கட்சிகளாக பதிவு செய்கின்றமை சட்டவிரோதமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் இலங்கை இந்தியாவின் கொலனியாகும்

## விமல் வீரவன்ஸ எச்சரிக்கை



“பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு இலங்கையில் ஆதிக்கம் செலுத்த இந்தியா பல்வேறு வழிகளில் முயற்சிக்கிறது. எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் இலங்கை இந்தியாவின் கொலனியாக மாற்றமடையும்.”

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் எட்கா ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட அரசாங்கம் துரித நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பல்வேறு நாடுகளுடன் அரசியல் மற்றும் பொருளாதார ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுவதற்காகப் பிரத்தியேக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு விசேட அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரத்தியேக அதிகாரிக்கும், இந்தியாவுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆகவே வெகுவிரைவில் இரு நாடுகளுக்கும் இடையில் எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். எட்கா ஒப்பந்தத்துக்கு எதிராகக் கடந்த காலங்களில் மக்கள் மத்தியிலும், அரசியல் மட்டத்திலும் கடும் எதிர்ப்புகள் தோற்றம் பெற்றமையால் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வெற்றியளிக்கவில்லை.

தொழிற்றுறை மற்றும் வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் இலங்கையர்களுக்கான உரித்தை இந்தியர்களுக்கு வழங்குவதை எட்கா ஒப்பந்தம் உள்நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் இலங்கையின் தொழிற்றுறை சந்தைப்படுத்தலில் இந்தியர்களுக்கு எவ்வித மட்டுப்பாடுகளும் இல்லாமல் அந்தஸ்து வழங்கப்படும். அதுமாத்திரமல்ல, மொத்த மற்றும் சில்லறை வர்த்தகங்களிலும் இந்தியாவுக்கு வழங்கப்படும்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு இலங்கையில் ஆதிக்கம் செலுத்த இந்தியா பல்வேறு வழிகளில் முயற்சிக்கிறது. எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் இலங்கை இந்தியாவின் கொலனியாக மாற்றமடையும். அத்துடன் இலங்கைக்குள் இந்திய ரூபாவையும், இலங்கையின் ரூபாவையும் பயன்படுத்தகூடிய நிலைமை தோற்றுவிக்கப்படும்.

நேபாளத்துக்கு ஏற்பட்ட கதியே இலங்கைக்கும் வெகுவிரைவில் ஏற்படும். ஆகவே எமது தொழிற்றுறை உரிமையை ஆக்கிரமிக்கும் எட்கா ஒப்பந்தத்துக்கு அனுமதி வழங்குவதா அல்லது எதிர்ப்பு தெரிவிப்பதா என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும்.” – என்றார்.

# கெஹெலியவைப் பதவி நீக்கி விசேட வர்த்தமானி அறிவித்தல்



கெஹெலிய ரம்புக்வெலவை சுற்றாடல் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

கெஹெலிய ரம்புக்வெல்ல சுற்றாடல் அமைச்சர் பதவியில் இருந்து விலகுவதற்கான கடிதத்தை ஜனாதிபதியிடம் நேற்று சமர்ப்பித்தார்.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டன எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் இது குறித்து வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையான போதே அவர் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையிலேயே, கெஹெலிய ரம்புக்வெல்ல தமது பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பித்திருந்தார்.




# நாணய நிதியத்தின் திறன் மேம்பாட்டுக் குழு இலங்கையில் நிலைகொண்டு செயற்படும்!

நிதி விவகாரங்களில் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் திறன் மேம்பாட்டு பணிக்குழு ஒன்று இலங்கையில் இருந்து செயற்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சின் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில், முக்கியமான பொருளாதார பிரச்சினைகளில் தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சிகளை இந்தக் குழு வழங்கவுள்ளது.

எனினும் இந்த பணி, சர்வதேச நாணய நிதியத்தின் மறு ஆய்வுப் பணிகளிலிருந்து வேறுபட்டது என நிதியமைச்சின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை ரூபாவை அந்நிய செலாவணியாக மாற்றுவதற்குரிய நிபந்தனைகளில் தளர்வு

வெளிநாட்டுப் பணப் பரிமாற்றங்களுக்காக இலங்கை ரூபாவை அந்நிய செலாவணியாக மாற்றுவதற்கான நிபந்தனைகளை கட்டம் கட்டமாக தளர்த்துவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப் பின்போது அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து இலங்கையில் வசிப்பவர்கள் வெளிநாட்டு முதலீடுகளுக்கு பணத்தை அனுப்புவதற்கான அனுமதியை இலங்கை மத்திய வங்கி சில நிபந்தனைகளின் கீழ் மட்டுப்படுத்தியிருந்தது.

இந்தநிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பான அறிக்கைக்கு அமைய நாட்டின் செலுத்துகை மீதி நிலையான மட்டத்துக்கு வரும் போது கட்டம் கட்டமாக நிர்வாக கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு இலங்கை பிணைக்கப்பட்டுள்ளது.

அதற்கு ஏற்றவகையில் வெளிநாட்டுப் பணப் பரிமாற்றங்களுக்காக இலங்கை ரூபாவை அந்நிய செலாவணியாக மாற்றுவதற்கான நிபந்தனைகளை கட்டம் கட்டமாக தளர்த்துவதற்கு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் சபை பரிந்துரைத்துள்ளது.

இதன்படி, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 (1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ள உத்தரவுகளை பிரகடனம் செய்வதற்கும், அதன் பின்னர் அங்கீகாரத்துக்காக நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளிநாட்டிலிருந்து அழைப்பு எடுத்த ஈழ செயற்பாட்டாளர் ஒருவர் 'சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை!' என்றார்.

பாரதத்தை பொறுத்தவரை கடலால் பிரிக்கப்பட்ட அதன் இரு அயல் தேசங்கள் இலங்கையும் மாலைதீவும்.

இயல்பாகவே இந்தியாவின் போட்டிச் சக்தியான சீனாவின் சமுத்திர ரீதியான சவால் குறித்து அதிகம் கவலை – சிரத்தை – கரிசனை – காட்டி வரும் இந்தியாவுக்கு, மாலைதீவு தன்னைப் பகைத்துக் கொண்டு சீன வலையில் விழுந்தமை குறித்து அதிருப்தி, அதிர்ச்சி, அசூசை, ஆவேசம் எல்லாமுமே.

மற்றைய அயல் நாடான இலங்கை ஏற்கனவே சீனக் கடன் பொறியில் சிக்குண்டுள்ளது. இயல்பாகவே சீனச் சார்புப் போக்குக் கொழும்பில் வலிமையாக உள்ளது.

அத்தகைய இலங்கை, சீன வலையில் விழுந்து விடாமல் இருப்பதற்காக இங்கு எதுவும் செய்யப் புதுடில்லி தயார் என்பதுதான் இப்போது அம்பலத்திற்கு வரும் உண்மை.

'பலமான இந்தியா' – மோடி தலைமையில் வலுவான நாடு – என்றெல்லாம் சொல்லிக் கொண்டாலும், சீனாவின் இராணுவ, பொருளாதார, ராஜதந்திர வலிமையும் விஸ்ரிப்பும் புதுடில்லிக்குப் பக்குப் பக்கு என்று அடிக்க வைக்கின்றது என்பது மறுக்க முடியாத நிலைமைதான் என்றார் அந்த ஈழ செயற்பாட்டு நண்பர்.

இலங்கையை – கொழும்பை – தாஜா பண்ணி, தன் வலையில் விழப் பண்ணுவதற்குத் தேவைப்பட்டால் தமிழர் நலனை வலியுறுத்துவதாகக் காட்டும் தன் நிலைப்பாட்டையும் தூக்கிக் கடாசி விடும் இந்தியா என்று கூறிய அந்த நண்பர், சம்பந்தமில்லாமல் ஒரு குட்டி கதையைத் திடீரெனக் கூறத் தொடங்கினார்.

ஒரு குரங்கின் தாய்ப் பாசத்தின் வலிமையை சோதிக்க விரும்பினர் ஆய்வாளர்கள்.

ஒடுங்கிய, உயரமான, கண்ணாடியினாலான 'ட்ரம்' அது. அதற்குள் குரங்கையும் குட்டியையும் பக்கத்து பக்கத்தில் நிற்க விட்டனர். நிற்கத்தான் முடியும். ஒடுக்கம் காரணமாக அமர முடியாது. ட்ரம்மின் மேல் பக்கத்தை மூடி விட்டு, ட்ரம்முக்குள் கீழிருந்து தண்ணீரைத் திறந்து விட்டனர். மெல்ல மெல்லத் தண்ணீர் மட்டம் உயர்ந்தது. குட்டியின் மூக்களவுக்கு தண்ணீர் வந்ததும் தாய்க்குரங்கு குட்டியைத் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொண்டது. மேலும் மேலும் தண்ணீர் மட்டம் உயர்ந்தது. குரங்கு குட்டியைத் தூக்கி தன் தோளில் வைத்தது.

இப்போது குட்டியின் மூக்கின் உயரம், குரங்கின் மூக்கின் உயரத்தை விட உயர்வாக இருந்தது. ஆய்வாளர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. தன்னை ஆபத்தில் ஆழ்த்தி, தாய்க் குரங்கு குட்டியைக் காப்பாற்ற முனைகின்றது என்பதை அதிசயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

தண்ணீர் மட்டம் குரங்கின் கழுத்து வரை வந்தது. தொடர்ந்து மெல்ல மெல்ல அது உயர்ந்தது. குரங்கின் மேவாயைத் தாண்டி, மூக்கைத் தொட்டதும் குரங்கு, ஆய்வாளர்களே அதிர்ச்சி அடையும்படி ஒரு காரியம் பண்ணியது.

தோளில் தூக்கி வைத்திருந்த தனது குட்டியைச் சடாரெனத் தண்ணீருக்குள் – ட்ரம் கீழ் மட்டத்தில் – போட்டுவிட்டு, மூச்சு விட முடியாமல் துடித்துக் கொண்டிருந்த குட்டியின் மீது ஏறி நின்றது குரங்கு.

– என்று இந்தக் குட்டிக் கதையை எடுத்துரைத்தார் அந்த நண்பர்.

இந்தக் கதை எதற்காக என்று விளங்காமல் நான் கேட்டேன்.

குரங்கு குட்டியைத் தூக்கி இடுப்பில் வைத்தது 1980களில் நடந்தது. ஈழத் தமிழர்களுக்காகப் பாரதம் குரல் கொடுத்தது அப்போதுதான். இப்போது சீனா பக்கம் சாயாமல் கொழும்பை வளைத்துப் போட்டு தன்னைக் காப்பாற்ற வேண்டிய நிலையில் உள்ள பாரதம், தன்னைக் காப்பதற்காக இதுவரை தான் ஆதரவு வழங்கி, பாதுகாப்பதாகக் கூறி வந்த இலங்கைத் தமிழர் நலன் பற்றிய விவகாரத்தைக் கூடத் தூக்கிப்போட்டு மிதிக்கப் பின்நிற்காது. அதைச் சொல்லத்தான் இந்த உதாரணம், குட்டிக் கதை என்றார் என் நண்பர்.

உங்களுக்கு இக்கதை யின் ஆழம் விளங்குகின்றதா நண்பர்களே...?

## ஒன்பதாவது நாடாளு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விருந்தினர்கள் இன்று முற்பகல் 9.45 மணிக்குள் தங்கள் இருக்கைகளில் அமருமாறு கோரப்பட்டிருக்கின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன மற்றும் அவருடைய பாரியாரின் வருகையைத் தொடர்ந்து, பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் வருகையும், அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முதற்பெண்மணியின் வருகையும் இடம்பெறவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர நாடாளுமன்றக் கட்டடத்தின் பிரதான நுழைவாயிலின் படிக்கட்டுக்கு அருகில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வரவேற்பார்கள்.

அதனைத் தொடர்ந்து, படைக்கல சேவிதர், பிரதி படைக்கல சேவிதர் ஆகியோர் முன்செல்ல சபாநாயகர், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோரால் ஜனாதிபதி நாடாளுமன்ற கட்டடத்துக்குள் அழைத்துச் செல்லப்படுவார்.

நாடாளுமன்றத்தின் பிரதான நுழைவாயிலுக்கு அருகே கொழும்பு தேவி பாளிகா கல்லூரியின் மாணவியர் ஜயமங்கல கீதம் இசைக்கவுள்ளனர்.

அதன் பின்னர் உடையணி அறைக்கு அழைத்துச் செல்லப்படவுள்ள ஜனாதிபதி மு.ப. 10.25 மணி வரை அங்கிருப்பதுடன், அதனைத் தொடர்ந்து பாராம்பரியத்துக்கு அமையப் பிரதிப் படைக்கல சேவிதர், செங்கோலைக் கையில் தாங்கியவாறு படைக்கல சேவிதர், ஜனாதிபதி, சபாநாயகர், செயலாளர் குழு மற்றும் பிரதிப் படைக்கல சேவிதர் என்ற வரிசைப்படி அணிவகுத்து சபா மண்டபத்துக்குள் செல்வர். சபைக்குள் நுழையும்போது பிரதிப் படைக்கல சேவிதர் "கௌரவ ஜனாதிபதி" எனத் தெரிவித்ததும் ஆளும் கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமது ஆசனங்களிலிருந்து எழுந்து நிற்பது பாரம்பரியமாக இடம்பெறும்.

சபா மண்டபத்துக்கு அழைத்துவரப்படும் ஜனாதிபதி அங்கிராசனத்தில் அமர்ந்து சபைக்குத் தலைமை தாங்குவார். இதன்போது சபாநாயகர், நாடாளுமன்ற குழுநிலையின்போது அமரும் கீழ் பகுதியிலுள்ள ஆசனத்தில் செயலாளர் குழுவுடன் அமர்ந்திருப்பார். இதனைத் தொடர்ந்து ஜனாதிபதியால் ஆளும் தரப்பின் கொள்கைப் பிரகடன உரை நிகழ்த்தப்பட்டு, சபை நாளை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்படும். சபை ஒத்திவைக்கப்பட்டதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்கு தேநீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடரை வைபவ ரீதியாகத் தொடக்கி வைக்கும் நிகழ்வில் வெளிநாட்டு இராஜதந்திரிகள், முன்னாள் ஜனாதிபதி, பிரதம நீதியரசர், சட்டமா அதிபர், பாதுகாப்புச் செயலாளர், முப்படைத் தளபதிகள் மற்றும் பதில் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட விசேட விருந்தினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என்று படைக்கல சேவிதர் குஷான் ஜயரத்ன தெரிவித்தார். விருந்தினர்களுக்கான அழைப்பிதழ்கள் இலத்திரனியல் முறையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## வெடி விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேகரிக்கும் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் மஸ்கெலியாவைச் சேர்ந்த குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

மஸ்கெலியா, கிலென்டில்ட் தோட்டத்தை சேர்ந்த 49 வயதான கந்தசாமி ஜெகன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் 7 வயது பிள்ளையின் தந்தையாவார்.

வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்த அந்த நபர், அவிசாவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

மற்றுமொரு நபருடன் இணைந்து பழைய இரும்புகளைச் சேகரித்துக் கொண்டிருந்தபோதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரணமடைந்தவரின் சடலம், அவிசாவளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணை அதிகாரிகள் மற்றும் அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அவிசாவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## இங்கு மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

இந்த வருட இறுதிக்குள் இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, வியட்நாம் மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் அலி சப்ரி இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் அலி சப்ரி,

"ஸ்திரமான பொருளாதாரத்தை உருவாக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொலைநோக்குப் பார்வையின் படி, போட்டித்தன்மை வாய்ந்த புதிய சந்தைகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு இலங்கையின் பொருளாதாரத்துக்கு நேரடியாகப் பங்களிப்புகளைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றோம்.

அதன் வரலாற்று சிறப்புமிக்க முன்னெடுப்பாக, அண்மையில் தாய்லாந்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

உலகில் பாரிய அளவில் சந்தை வாய்ப்புகள் உள்ளன. 07

# யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 50 நாள்களில் 56 ஆயிரத்து 541 பேர் கைது!

இலங்கையில் யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கை ஆரம்பமாகி நேற்றுடன் 50 நாள்கள் நிறைவடைந்த நிலையில், இந்தக் காலப்பகுதியில் 56 ஆயிரத்து 541 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் 49 ஆயிரத்து 558 சந்தேகநபர்களும், குற்றப் பிரிவினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள 6 ஆயிரத்து 983 சந்தேகநபர்களும் இதில் உள்ளடங்குகின்றனர்.

இந்தச் சுற்றிவளைப்புகளின் போது 142 கிலோ 541 கிராம் ஹெரோயின், 208 கிலோ 290 கிராம் ஐஸ் ஆகிய போதைப்பொருட்கள் பாதுகாப்பு தரப்பினரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் 1,817 பேர் தடுத்து வைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான 1,981 பேர் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

# தாயும், மகனும் விபத்தில் காயம்

பதுளை – பசறை வீதி 8 ஆம் கட்டை பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியை விட்டு விலகி மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் தாயும் மகனும் காயமடைந்துள்ளனர்.

பசறை, ரணுகல்ல பகுதியை சேர்ந்த 45 வயதுடைய தாயும், 22 வயதுடைய மகனுமே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் பசறை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்..

விபத்து தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் இரண்டும் இந்த வருடம் நடத்தப்படும்

## அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தகவல்

இந்த வருடத்தில் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் என்பன நடத்தப்படவுள்ளன என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய செலவினங்களுக்கான நிதி 2024ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் தேர்தலுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 10 பில்லியன் ரூபாவில் முகாமைத்துவம் செய்ய வேண்டியுள்ளமை தொடர்பில் அமைச்சரவை கவனம் செலுத்தியுள்ளது.

ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் அடிப்படையில் அமைச்சரவை இந்த விடயத்திற்கு இணங்கியுள்ளது.

அரசாங்கத்திடம் காணப்படும் வரையறுக்கப்பட்ட நிதி நிலைமையினால், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை நடத்துவதற்கு தேவையான நிதியை 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டத்தின் ஊடாக வழங்க வேண்டியுள்ளமை தொடர்பிலும் அமைச்சரவை ஆராய்ந்துள்ளது.

எவ்வாறாயினும், அந்த 2 தேர்தல்களையும் நடத்துவதற்கு முன்னதாக விசாரணை ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்படவுள்ள பரிந்துரைகளுக்கு அமைய தேவைப்படும் பட்சத்தில் தொடர்புடைய தேர்தல் சட்டங்களை மறுசீரமைப்பதற்கான திருத்தங்களை நாடாளுமன்ற அனுமதியின் அடிப்படையில் அறிமுகம் செய்ய வேண்டுமெனவும் அமைச்சரவை கலந்தாலோசித்துள்ளது." – என்றார்.

## இங்கு மீண்டும்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அபிவிருத்தி அடைந்த பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள் அந்தப் பாரிய சந்தை வாய்ப்புகளை சிறப்பாகக் கையாள்வதன் மூலம் தங்கள் பொருளாதாரத்தை வலுப்படுத்தியுள்ளன. வியட்நாம் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகள் இன்று உலகின் பாரிய சந்தைகளுடன் சுதந்திர பொருளாதார ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதன் மூலம் வலுவான பொருளாதாரத்தை அடைந்துள்ளன. இதன் மூலம் ஏற்றுமதி பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும்.

1991 ஆம் ஆண்டில் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் சுமார் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. அதே காலகட்டத்தில் பங்களாதேஷ் மற்றும் வியட்நாமும் இதே பெறுமதியில் இருந்தன. ஆனால், 2022 இல் வியட்நாமின் ஏற்றுமதி வருமானம் 373 பில்லியன் அமெரிக்க டொலர்களாக மாறியுள்ளது. இவை அனைத்துக்கும் அவர்கள் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்தியமை தான் பிரதான காரணமாகும்.

ஆசிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டு இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நீண்ட கால வேலைத்திட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ளார். அது வெற்றியடையும் பட்சத்தில் இலங்கைக்கு வீழ்ச்சியடையாத பொருளாதாரத்தை உருவாக்க முடியும்.

அண்மையில் தாய்லாந்துப் பிரதமருடன் இந்நாட்டுக்கு வருகை தந்திருந்த தூதுக்குழுவினர் இலங்கையுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் மாத்திரமன்றி பல முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பிலும் கைச்சாத்திடப்பட்டது. இதன் மூலம் ஒருபுறம் ஏற்றுமதி வலுவடையும் அதே வேளையில் இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளும் அதிகரிக்கும்.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் காரணமாக, மீன்பிடி, சுற்றுலா, விவசாயம் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஆகியவற்றில் இலங்கை பெருமளவிலான முதலீடுகளைப் பெறும் வாய்ப்பும் எற்பட்டுள்ளது.

தொழில்நுட்ப சேவைகளை வழங்கவும் தாய்லாந்து ஒப்புக் கொண்டுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தியா, சீனா, தாய்லாந்து, சிங்கப்பூர், இந்தோனேஷியா, மலேசியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்மூலம், இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி, வளமான இலங்கையை உருவாக்குவதற்கான முதல் அடியை எடுக்கவும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

உலக நாடுகளின் பாரிய சந்தைகளுடன் பரிவர்த்தனைகளை மேற்கொண்டு இலங்கையின் பொருளாதாரத்தை விரிவுபடுத்தும் வாய்ப்பும் உள்ளது." – என்றார்.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, அமைச்சின் அதிகாரிகள் ஆகியோரும் இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அரசமைப்புக் கவுன்ஸில் விவகாரம்

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

அரசமைப்பின் 33 ஆவது உறுப்புரையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று காலை நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை முன்வைக்கவுள்ளார்.

இன்றைய வைபவ ரீதியான அமர்வின்போது ஜனாதிபதி அக்கிராசனத்தில் அமர்ந்து சபைக்குத் தலைமை தாங்குவார். இதன்போது சபாநாயகர், நாடாளுமன்ற குழுநிலையின் போது அமரும் கீழ் பகுதியிலுள்ள ஆசனத்தில் செயலாளர் குழுவுடன் அமர்ந்திருப்பார். இதனைத் தொடர்ந்தே ஜனாதிபதியினால் அரசாங்கத்தின் கொள்கைப் பிரடகன உரை நிகழ்த்தப்படவிருக்கின்றது.

இந்த நிகழ்வில் வெளிநாட்டு இராஜதந்திரிகள், முன்னாள் ஜனாதிபதிகள், பிரதம நீதியரசர், சட்டமா அதிபர், பாதுகாப்புச் செயலாளர், முப்படைத் தளபதிகள் மற்றும் பதில் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட விசேட விருந்தினர்கள் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

இவர்களின் முன்னிலையில் இன்று நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி ஆற்றும் உரை சகல தரப்பினராலும் உன்னிப்பாகக் கவனித்துப் பார்க்கப்படுகின்றது.

இந்த வருடத்தை தேர்தல் ஆண்டு என்று ஏற்கனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்து விட்டார். அது தொடர்பில் தமது உத்தேசத் திட்டங்களை - கருத்துக்களை - ஜனாதிபதி விக்கிரமசிங்க இன்று முன்வைப்பாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேசமயம் பொலிஸ்மா அதிபர் நியமனம் உட்பட பல புதிய விடயங்களை முன்னெடுப்பது தொடர்பில் ஜனாதிபதிக்கும் சபாநாயகர் தலைமையிலான அரசமைப்புக் கவுன்ஸிலுக்கும் இடையில் நீண்ட இழுபறி - முரண்பாடு - நிலவுகின்றது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் கட்டுமட்டில்லா சுதந்திரங்களை - எல்லையற்ற அதிகாரப் பிரயோகங்களை - வரையறைக்குள் கொண்டு வந்து, ஒழுங்குபடுத்தும் இலக்கோடு தான் அரசமைப்புக் கவுன்ஸில் முறைமையே கொண்டுவரப்பட்டது.

அதற்காக அரசமைப்பு கவுன்ஸில் சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும், வெளி அழுத்தங்களின்றியும் தனித்துவமாக இயங்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசமைப்பு கவுன்ஸிலின் உறுப்பினர்கள் தமது மனச்சாட்சிக்கு அமைய, புத்திசாலித்தனமாகவும் சுதந்திரமாகவும் தீர்மானங்களை எடுக்க வாய்ப்பளிப்பது முக்கியம்.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ தன் விருப்பப்படி அரசமைப்புக் கவுன்ஸில் இயங்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார். தன் கைப்பொம்மையாக செயல்படவே அரசமைப்புக் கவுன்ஸில் உருவாக்கப்பட்டிருப்பது போல கருத்துரைகளைத் தெறிக்க விடுகின்றார் அவர்.

சபாநாயகரின் தலைமையின் கீழ் செயற்படும் அரசமைப்புக் கவுன்ஸிலைத் தனது நிறைவேற்றுதிகாரத்தின் கீழே வரும் ஒரு கட்டமைப்பு என்று கூறுவதன் மூலம், தான் பரிந்துரைக்கும் நியமனங்களை அங்கீகரிக்கும் ரப்பர் ஸ்டாம்ப் கட்டமைப்பு அரசமைப்புக்கவுன்ஸில்என்றஒருபடத்தை போட அவர் முனைகின்றார்.

இவ்விடயத்தில் நிறைவேற்றுதிகார ஜனாதிபதியின் அதிகாரப் பிரயோகங்களைக் கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்த வேண்டிய அரசமைப்புக் கவுன்ஸிலை, தன் விருப்பப்படி இயங்க வேண்டிய ஒரு கட்டமைப்பு என்று காட்டும் விதத்தில் - அர்த்தத்தில் - ஜனாதிபதி செயற்பட முயற்சிக்கின்றார்.

இதனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பரிந்துரைகள் தொடர்பில் மேற்கொண்டு அங்கீகாரம் அளிக்காத - அளிக்க முடியாத - நிலையில் அரசமைப்புக் கவுன்ஸில் இருப்பதால் பல விடயங்கள் முன்நகராமல் தேங்கிக் கிடக்கின்றன.

“ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டதே அரசமைப்புக் கவுன்ஸில். அதனை யாரும் பலவீனப்படுத்தக் கூடாது. அது சுதந்திரத்துடனும், சுயாதீனத்துடனும், சொந்த எண்ணப்படி செயற்படவும் இயங்கவும் அனுமதிக்கப்பட வேண்டும். அதனை அடிப்படையாகக் கொண்டு எந்தத் தரப்பும் மோதலுக்குப் போகக்கூடாது.” - என்று பழுத்த அரசியல்வாதியும், முன்னாள் சபாநாயகரும், நீதியான சமூகத்திற்கான தேசிய அமைப்பின் தலைவருமான கரு ஜயசூரியா கூறியுள்ளார்.

ஆனால் தம் இஷ்டப்படி - தம் எதிர்பார்ப்புகளுக்கு இணங்க - செயற்பட முன்வராத அரசமைப்புக் கவுன்ஸில் குறித்தும், அதன் தலைவரான சபாநாயகர் பற்றியெல்லாம் இன்றைய தமது அரசின் கொள்கை விளக்க உரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருத்து வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனாலும் அவரது உரை தொடர்பான விடயங்களை ஒட்டி நாடாளுமன்றம் வரும் நாள்களில் இரண்டு தினங்கள் விவாதிக்க இருக்கின்றது. அப்போது அரசமைப்புக் கவுன்ஸிலின் செயற்பாடுகள் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று முன்வைக்கக்கூடிய கருத்துக்களுக்கு எதிர் அணியினர் சரியான பதிலடி தருவர் என எதிர்பார்க்கலாம்.

# பட்டாசு ஆலை வெடி விபத்தில் 11 பேர் பலி, 200 பேர் காயம்!

## மத்தியப் பிரதேச மாநிலத்தில் சம்பவம்




மத்தியப் பிரதேச மாநிலம் ஹர்தாவிலுள்ள பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர். சுமார் 200 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த வெடிவிபத்தின் தீவிரத்தால் அருகிலுள்ள நர்மதாபுரம் மாவட்டத்தின் சியோனி மால்வாவிலும் அதிர்வுகள் உணரப்பட்டன என அங்குள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து ஏற்பட்ட வெடிவிபத்து காரணமாக, அப பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளில் வசித்த மக்களை அதிகாரிகள் அங்கிருந்து அப்புறப்படுத்தியுள்ளனர்.

இந்த வெடிவிபத்து காரணமாக அந்தப் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஏராளமான மோட்டார் சைக்கிள்களும் தீக்கிரையாகி உள்ளன என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்தவர்கள் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த கோர சம்பவம் குறித்து அதிகாரிகளுடன் பேசியுள்ள மத்தியப் பிரதேச முதல்வர் மோகன் யாதவ், விபத்து குறித்து முழு தகவல்களையும் வழங்கும்படி கேட்டுள்ளார்.

இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“ஹர்தாவில் உள்ள பட்டாசு ஆலையில் வெடி விபத்து ஏற்பட்டுள்ளதாக துயரமான செய்தி வந்துள்ளது. அமைச்சர் உதய் பிரதாப் சிங் மற்றும் மூத்த அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர். இந்தூர் மற்றும் போபாலில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் தீ காய பிரிவுகள் தயார் நிலையில் வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்கு கூடுதலாக தீயணைப்பு வாகனங்கள் அனுப்பப்பட்டுள்ளன” என்று தெரிவித்திருந்தார்.

இதேவேளை, மத்தியப் பிரதேச மாநிலம் ஹர்தாவில் பட்டாசு தொழிற்சாலையில் நேரிட்ட விபத்தில் உயிர் இழந்தோரின் குடும்பத்தினருக்குப் பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் ரூபாவும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாவும் பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து உதவித் தொகையாக வழங்கப்படும் என்று பிரதமர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில்,

“மத்தியப் பிரதேச மாநிலம் ஹர்தாவில் உள்ள பட்டாசு தொழிற்சாலையில் நேரிட்ட விபத்தில் ஏற்பட்ட உயிர் இழப்பு மிகுந்த மன வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. தங்கள் அன்புக்குரியவர்களை இழந்து வாடும் அனைவருக்கும் இரங்கல். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டுகிறேன். பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உள்ளூர் நிர்வாகம் உதவி வருகிறது.” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழக வெற்றி கழகத்தின் சின்னத்தை வடிவமைக்கும் பணி முன்னெடுப்பு



தமிழக வெற்றி கழகத்தின் சின்னத்தை வடிவமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை கட்சித் தலைவர் விஜய்யின் ஆதரவாளர்கள் மத்தியில் அதிக ஆர்வத்தை தூண்டியுள்ளது.

தமிழக வெற்றி கழகம் என்ற பெயரில் நடிகர் விஜய் தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

இது இந்தியாவின் அரசியல் வட்டாரத்தில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், தற்போது விஜய் தனது கட்சியின் சின்னத்தை வடிவமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார் என குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், கட்சியின் சின்னம் குறித்து அகில இந்திய விஜய் மக்கள் இயக்கத்தின் பொதுச் செயலாளர் மற்றும் நிர்வாகிகளுடன் விஜய் ஆலோசித்து வருகிறார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, கட்சியின் சின்னம் தொடர்பான தகவல் விரைவில் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செங்கடலில் மீண்டும் பரபரப்பு: பிரித்தானிய கப்பல் மீது தாக்குதல்






செங்கடல் பகுதியில் பிரித்தானியாவிற்கு சொந்தமான கப்பலொன்று தாக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

செங்கடல் வழியாக நேற்று அந்தக் கப்பல் பயணித்துக் கொண்டிருந்த போதே ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஹெடெய்டாவிற்கு மேற்கே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது என பிரித்தானிய இராணுவத்தின் கடல்வர்த்தகம் தொடர்பான அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. கப்பலின் ஜன்னல்களிற்கு சிறிய சேதம் ஏற்பட்டுள்ளது.

மேற்படி கப்பல் தாக்கப்படுவதற்கு முன்னர் அந்தப்பகுதியில் சிறிய படகு ஒன்று காணப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரித்தானிய தனியார் நிறுவனத்துக்கு சொந்தமான சரக்குக் கப்பல் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பார்படோஸ் கொடியுடன் அந்தக் கப்பல் சென்று கொண்டிருந்தபோது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த தாக்குதல் சம்பவத்துக்கு எந்த குழுவும் உடனடியாக பொறுப்பேற்கவில்லை.

இந்த நிலையில் யேமனில் உள்ள ஈரானிய ஆதரவு ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.





# இஸ்தான்புல் நீதிமன்றத்திற்கு வெளியே தாக்குதல்: இருவர் பலி

இஸ்தான்புல்லின் பிரதான நீதிமன்றத்திற்கு வெளியே உள்ள பாதுகாப்புச் சோதனைச் சாவடியைத் தாக்கிய இடதுசாரி அமைப்பொன்றை சேர்ந்த இருவர் துருக்கிய பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளனர்.

இந்த தாக்குதலின்போது பொலிஸ் அதிகாரிகள் மூவர், பொதுமக்கள் மூவர் என ஆறு பேர் காயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலை மேற்கொண்டவர்கள் 1980 களில் இருந்து துருக்கியில் அவ்வப்போது தாக்குதல்களை நடத்தி வரும் புரட்சிகர மக்கள் விடுதலை முன்னணி என்ற இடதுசாரிக் குழுவின் உறுப்பினர்கள் என உள்துறை அமைச்சர் அலி யெர்லிகாயா குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், எந்த குழுவும் இந்த தாக்குதலுக்கான பொறுப்பை வெளிப்படையாக ஏற்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிலியில் காட்டுத் தீயில் சிக்கி 123 பேர் பலி



தென் அமெரிக்க நாடான சிலியில் ஏற்பட்ட காட்டுத் தீயில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 123 ஆக அதிகரித்துள்ளது.

சிலி நாட்டின் வல்பரைசோ பகுதியில் உள்ள வனத்தில் சில தினங்களுக்கு முன்னர் திடீரென காட்டுத் தீ ஏற்பட்டிருக்கிறது.

இதன் காரணமாக பல ஆயிரக்கணக்கான வீடுகள் பற்றி எரிந்து தீக்கிரையாகியுள்ளன. உடனடியாக தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து, மீட்புப் பணிகள் மும்முரமாக்கப்பட்டிருக்கிறது.

எனினும், 1931 இல் நிறுவப்பட்ட பிரபல தாவரவியல் பூங்கா ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை தீக்கிரையானது.

சிலியில் ஏற்பட்டிருக்கும் காட்டுத் தீயானது, மற்ற லத்தீன் அமெரிக்க நாடுகளையும் பாதித்துள்ளது. சிலியின் கரையோர நகரங்களில் புகை சூழ்ந்ததால், அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், காட்டுத் தீயில் இதுவரை 112 பேர்' உயிரிழந்தனர் என தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், நேற்றைய நிலவரப்படி உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 123 ஆக அதிகரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.




# இறங்குதுறை பிரச்சினைக்குத் தீர்வு கோரி சாவல்கட்டு மீனவர்கள் நேற்று போராட்டம்

தமது இறங்குதுறை பிரச்சினைக்கு தீர்வு கோரி யாழ்ப்பாணம் – சாவல்கட்டு மீனவர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 8:30 மணியளவில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலத்திற்கு முன்பாக ஆரம்பமான மீனவர்களின் போராட்டம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தை சென்றடைந்தது.

மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபரைச் சந்தித்த சாவல்கட்டு மீனவர்கள் தமது பிரச்சினைகளைத் தெரியப்படுத்தியுள்ளனர்.

தொடர்ந்து ஆளுநர் செயலக நுழைவாயிலை மறித்து நுழைவாயில் முன்பாக அமர்ந்து தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தாங்கள் ஆளுநரை சந்தித்த பின்னரே போராட்டத்தை நிறுத்துவோம் எனக் கூறி மீனவர்கள் நண்பகல் வரை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அளுநர் தற்போது யாழ்ப்பாணம் இல்லாத காரணத்தினால் இன்று சந்திக்க முடியாது எதிர்வரும் 8ஆம் திகதி ஆளுநரை சந்திக்கமுடியும் என வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன் கூறியமை அடுத்து போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் கலைந்து சென்றனர்.














# கச்சத்தீவு உற்சவத்திற்கான ஏற்பாட்டில் கடற்படையினர்

(ந.லோகதயாளன்)

கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான உற்சவம் எதிர்வரும் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகளை கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை மற்றும் இந்தியாவின் சர்வதேச கடல் எல்லைக் கோட்டிற்கு (IMBL) அருகில் கச்சத்தீவு அமைந்துள்ளது.

வருடாந்த பெருவிழாவின் பிரதான ஆராதனை யாழ் மறைமாவட்ட ஆயர் வணக்கத்திற்குரிய அருட்தந்தை ஜஸ்டின் ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட செயலாளர் இந் நிகழ்விற்கு தேவையான ஏற்பாடுகளை செய்துள்ளார். பக்தர்களின் நலன்கருதி உட்கட்டமைப்பு மற்றும் வசதிகளை ஏற்படுத்தும் பணியில் இலங்கை கடற்படையினர் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவின் உத்தரவுக்கமைய, வடக்குக்க டற்படைத் தளபதி ரியர் அட்மிரல் காஞ்சன பனாகொடவின் மேற்பார்வையின் கீழ், உள்கட்டமைப்பு பணிகளில் கடற்படை தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இதில் சுகாதாரம் மற்றும் குடிதண்ணீர் வசதிகள், தற்காலிக தங்குமிடங்கள், சாலைகள், இறங்குதுறைகள் மற்றும் மின்சார விநியோகத்தை உறுதி செய்தல் ஆகியவை அடங்குகின்றன.

இதேபோன்று, வருடாந்த திருவிழாவில் கலந்துகொள்ளும் பக்தர்களின் பாதுகாப்பிற்காக உயிர்காக்கும் குழுக்கள் மற்றும் மருத்துவ குழுக்களை இலங்கை கடற்படை அனுப்ப உள்ளதாகவும் கடற்படை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
















# உடுவில் மகளிர் கல்லூரி இருநுறாவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம் உடுவில் மகளிர் கல்லூரியின் இருநூறாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொண்டாட்ட நிகழ்வுகள் பாடசாலையில் இடம் பெற்றன.

கல்லூரி மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் கல்லூரியின் அதிபர் றொசானா மதுரமதி குலேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் முன்னாள் அதிபர் சிரானி மில்ஸ் கலந்து கொண்டார்.

இதன்போது இருநூறாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கேக் வெட்டப்பட்டது. இரண்டு இலட்சினைகள், பாடல் என்பனவும் வெளியிடப்பட்டன. கல்லூரி மாணவிகளின் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

தென்னிந்திய திருச்சபை பேராயர் கலாநிதி வே.பத்மதாயாளன், தென்னிந்திய திருச்சபை முன்னாள் பேராயர் ஜெபநேசன், கல்லூரி ஆசிரியர்கள், மாணவிகள், பழைய மாணவிகள், பெற்றோர், நலன்விரும்பிகள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

கல்லூரியின் இலட்சினைகள் கல்லூரி மாணவிகளான ஜோய்ஸ் பேலின் மயூரன், சாம்பவி சதீஷ் ஆகியோரால் உருவாக்கப்பட்டன.





# 20 கோடி ரூபா பெறுமதியான இரு கார்களை அரசுடைமையாக்குமாறு நீதிமன்றம் உத்தரவு

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் கணினி அமைப்பில் உள்ள தரவுகளை அழித்து, சாதாரண கார்களாகப் பதிவு செய்து, சுங்க வரி செலுத்தாமல் சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட சுமார் இருபது கோடி ரூபா பெறுமதியான இரண்டு சொகுசு வாகனங்களை உடனடியாக கைப்பற்றி அரசுடைமையாக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் நேற்று செவ்வாய்க்கிழமை இந்த உத்தரவை லஞ்ச, ஊழல்கள் விசாரணை ஆணைக் குழுவுக்குப் பிறப்பித்துள்ளார்.

இந்த இரண்டு சொகுசு வாகனங்களும் 2005 ஆம் ஆண்டு இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டு, இரண்டு சாதாரண கார்களாக அவற்றைப் பதிவு செய்து, சொகுசு வாகன இறக்குமதிக்காக அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய வரி இவற்றுக்குச் செலுத்தப்படாமை தொடர்பில் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நீதிமன்றத்துக்கு அறிவித்ததையடுத்து நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

# உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கு அமைவாகவே இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் நிறைவேற்றம்

## சபாநாயகர் அலுவலகம் அறிக்கை

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்டவாறு இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கு அமையவே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது என சபாநாயகர் அலுவலகம் அறிக்கை மூலம் நேற்று அறிவித்தது.

இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் நிறைவேற்றப்படும் சந்தர்ப்பத்தில், உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட சில பரிந்துரைகள் பின்பற்றப்படாமல் நிறைவேற்றப்பட்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பு தெரிவிக்கும் வகையிலேயே சபாநாயகர் அலுவலகம் மேற்படி அறிக்கையை விடுத்துள்ளது.

இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் தொடர்பான திருத்தங்கள் முன்வைக்கப்பட்டபோது, நாடாளுமன்றத்தில் அரச அதிகாரிகளுக்காக ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ நிலையத்தில் சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் தங்கியிருந்துள்ளார்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு அமைய, கட்டாயமாகச் சேர்க்கப்பட வேண்டிய திருத்தங்கள் அனைத்தும் தெரிவுக்குழு சந்திப்பின் போது சேர்க்கப்பட்டன என மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சபாநாயகருக்கு அறிவித்துள்ளார் என சபாநாயகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் சபையில் கருத்து தெரிவித்தார் எனவும், இது தொடர்பில் விளக்கமளிக்குமாறு சபாநாயகர் விடுத்த கோரிக்கைக்கு அமைய மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் நடவடிக்கை எடுத்ததார் எனவும் சபாநாயகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு, வழங்கப்பட்டுள்ள திருத்தங்கள் மற்றும் அரசமைப்பிற்கு அமைய சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகருக்கு அபிப்பிராயம் இல்லை என்ற அடிப்படையில், சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பும் கேள்விகள் தொடர்பில் உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன என கூறப்படுமாயின், அதற்கு பதிலளிக்க முடியும் எனவும் சபாநாயகர் அலுவலகம் கூறியுள்ளது.

நாடாளுமன்றத்தை அவதூறு செய்வது அல்லது அதன் நம்பகத்தன்மையை சீர்குலைப்பது சிறந்த விடயம் அல்லவென்பதை சபாநாயகர் அலுவலகம் அனைத்து நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கும்நினைவூட்டுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடுகளின் உரித்துரிமையை வழங்க அனுமதி

மாடி வீடுகளில் குடியிருக்கும் குறைந்த வருமானம் பெறும் 50 ஆயிரம் குடும்பங்களுக்கு வாடகை அறவிடுவதை இடைநிறுத்தி, அந்த வீடுகளின் உரித்துரிமையை அவர்களுக்கே வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள மாடி வீடுகளுக்கு, அந்த கட்டணம் அறவிடப்படுவதை இடைநிறுத்தி, அதற்கான உரிமையை அவர்களுக்கே வழங்க 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய, நகர அபிவிருத்தி அதிகார சபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றினால் வழங்கப்பட்டுள்ள வீடுகள் அவற்றின் உரிமையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

# மேலும் 1300 வைத்தியர்கள் அடுத்த மாதத்தில் நியமனம்

வைத்தியர் பற்றாக்குறைக்கு தீர்வாக எதிர்வரும் மார்ச் மாதம் அரச வைத்தியசாலைகளுக்கு மேலும் 1,300 வைத்தியர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்கள் தற்போது பயிற்சி நிறைவடையும் நிலையில் உள்ளனர் என சுகாதார செயலாளர் விசேட வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டும் பயிற்சி முடித்த 590 வைத்தியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

இதுவரை காலமும் வெற்றிடமாக இருந்த அரச வைத்தியசாலைகளுக்கே இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

அதனடிப்படையில், எதிர்காலத்தில் வைத்தியர்கள் பற்றாக்குறைக்கு தீர்வு காணப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கெஹெலியவுக்கு வீட்டில் இருந்து உணவு எடுத்துச்செல்ல அனுமதி

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிற்கு வீட்டில் இருந்து உணவு எடுத்துச்செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வைத்தியர்களின் பரிந்துரைக்கமைய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கெஹெலிய எழுத்துமூலம் கோரிக்கை விடுத்துள்ளார் என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் காமினி பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.



இதேவேளை, தற்போது சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள கெஹெலிய ரம்புக்வெல்ல, தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்கு கோரிக்கை விடுக்கவில்லை என சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளரும், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகமுமாகிய காமினி பி.திசாநாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இமியூனோகுளோபியூலின் மருந்து கொடுக்கல் - வாங்கல் தொடர்பில், அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல கடந்த வெள்ளிக்கிழமை முதல் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

# ஜே.வி.பியின் இந்திய விசிட்

# பலருக்கும் ஆச்சரியம்தான்!



(ந.லோகதயாளன்)

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவரின் புதிய முயற்சியின் நோக்கம் புரியாது திணறும் இலங்கை அரசு இந்தியாவின் அணுகுமுறைக் கொள்கையில் மாற்றம் ஏன்படுகின்றதா என விழி பிதுங்குகின்றது.

இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளி விவகாரக் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றமாக கருதப்படும் வகையில், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தலைவர் பேச்சுவார்த்தைக்காக புதுடில் லிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான குழுவொன்று இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் மற்றும் பாதுகாப்பு ஆலோசகரை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது.

இது குறித்து சமூக வலைத்தளமான எக்ஸ் இல் பதிவிட்டுள்ள கலாநிதி ஜெய்சங்கர், அநுரகுமார திஸநாயக்கவை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறார் எனவும் –

“நமது இருதரப்பு உறவு மற்றும் அதன் மேலும் ஆழமான பரஸ்பர நன்மைகள் பற்றிய ஒரு நல்லதொரு உரையாடல் இடம்பெற்றது. இலங்கையின் பொருளாதார சவால்கள் மற்றும் முன்னோக்கி செல்லும் பாதைகள் குறித்தும் பேசி னோம்” – என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இருந்தபோதும் இந்திய – இலங்கை ஒப்பந்தத் தின் விளைவாக கொண்டு வரப்பட்ட இலங்கை அர சமைப்பின் 13வது திருத்தத்தில் கூறப்பட்ட மைக்கு அமைய, தமிழர்களுடன் அதிகாரப் பகிர்வு பற்றி ஜே.வி.பி. பிரதிநிதிகளுடன் இந்தியத் தரப்பினர்விவாதித்தார்களாஎன்பதுதெளிவாகத்தெரிய வில்லை. அந்த திருத்தத்தை ஜே.வி.பி. ஆரம்பத் திலிருந்தே எதிர்த்துவருவதோடு, அதை “இந் திய விரிவாக்கம்” எனவும் விமர்சித்து வருகின் றது.

இந்தியா ஆதரவு திருத்தத்தை மக்கள் விடுதலை முன்னணி தொடர்ந்து எதிர்த்து வருவதோடு, கடந்த 2023 பெப்ரவரியில், அதன் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, பத்தி ரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியில், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துடன் தமது கட்சி எப்போதும் உடன்படவில்லை எனவும் கூறினார்.

ஐந்து நாள் பயணமாக இந்தியா சென்றுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் பிரதிநிதிகள் அரசியல் மற்றும் வர்த்தகத்துறையின் தலை வர்களைச் சந்திக்கவுள்ளனர்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் இந் தியா தமது கட்சியை அழைத்துள்ளமையானது நல்லதொரு இராஜதந்திர நகர்வு என மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கை பிரச்சாரக் குழுவின் உறுப்பினர் சாந்த ஜெயரத்ன தெரிவித் துள்ளார் என உள்ளூர் இணையதளம் செய்தி வெளியிட்டுள்ளது.

“இதற்கு முன்னர் எப்போதும் இல்லாத வகை யிலான இந்த நடவடிக்கை இருதரப்பு உறவு களை வலுப்படுத்துவது மட்டுமல்லாமல், தேசிய மக்கள் சக்தியின் வளர்ந்து வரும் சர்வதேச செல் வாக்கு மற்றும் கேந்திர ரீதியான பார்வையை அடிக் கோடிட்டுக் காட்டுவதாக ஜே.வி.பி நம்புகின்றது. குறிப்பாக இரண்டு பொருளாதார சக்தி நாடுகளான சீனா மற்றும் இந்தியா இடையேயான உறவுகளுக் கும் இடையே எப்படி சமப்படுத்தி ஜே.வி.பி செல் கின்றது என்பதையும் இது காட்டுகிறது.”

இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தல்களுக்கு முன்னதாக, ஒரு முக்கியமான நேரத்தில் அநுரவின் இந்தியப் பயணம் அமைந்துள்ளது.

“இந்த விஜயம் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவது மாத்திரமல்லாமல், இலங்கை யின் அரசியல் நிலப்பரப்பிற்கு தெளிவான சமிக் ஞையையும் அனுப்புகிறது, இது தேசத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் தேசிய மக்கள் சக்தியை ஒரு முக்கியமான சக்தியாக இந்தியா அங்கீகரிக்கிறது”.

போர்க் குற்றச்சாட்டுகளுக்கு ஆளான முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வழிவகுத்த அறகலய போராட்டத்திற்குப் பின்னர், அநுரகுமார திஸநாயக்க பிரபலமடைந்து வருவ தான செய்திகள் அதிகரித்துள்ள நிலையில், தேசிய

தொடர்ச்சி ▼

# ஜே.வி.பியின் இந்திய விசிட்

# பலருக்கும் ஆச்சரியம்தான்!

தொடர்ச்சி ▲

மக்கள் சக்தியை இந்தியா அழைத்துள்ளதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அநுர போட்டியிடக் கூடும் எனக் கூறப்படும் நிலையில், அவருக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகமாக உள்ளதாக கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன. அவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதான எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை விட முன்னணியில் உள்ளார் என அந்தக் கருத்துக்கணிப்புகள் எதிர்வு கூறியுள்ளன.

இந்தியா சென்றுள்ள தேசிய மக்கள் சக்தி குழுவினர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் சொந்த மாநிலமான குஜராத்தின் தலைநகர் அஹமதாபாத்திற்கும், இடதுசாரிகள் ஆட்சி செய்யும் தென்னிந்திய மாநிலமான கேரளாவின் தலைநகர் திருவனந்தபுரத்திற்கும் பயணிக்கவுள்ளனர் எனச் செய்திகள் கூறுகின்றன.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் இந்திய பத்திரிகையான ‘தி இந்து’வுக்கு அநுர குமார அளித்த செவ்வியில் “நமது நெருங்கிய அண்டை நாடான இந்தியா ஒரு முக்கிய அரசியல் மற்றும் பொருளாதார மையமாக மாறியுள்ளது என்பதை நாங்கள் அறிவோம். எனவே, நாம் பொருளாதார மற்றும் அரசியல் முடிவுகளை எடுக்கும்போது, அது இந்தியாவை எப்படி பாதிக்கும் என்பதைப் பற்றி எப்போதும் அக்கறை காட்டுவோம்” எனக் கூறியிருந்தார்

இந்தியாவுக்கான இந்த விஜயத்தில் அநுர குமார திஸநாயக்கவுடன் தேசிய மக்கள் சக்தியின் செயலாளர் நிஹால் ஜயசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மற்றும் பொருளாதார நிபுணர் பேராசிரியர் அனில் ஜயந்த ஆகியோரும் இணைந்து கொண்டுள்ளனர்.

இலங்கைக்கான இந்தியாவின் புதிய தூதுவர் சந்தோஷ் ஜா தூதுவராகப் பொறுப்பேற்று சிறுது காலத்தில் இந்தியாவின் கொள்கை வகுப்பில் பாரிய மாற்றங்கள் ஏதும் நிகழ்ந்திருக்க வாய்ப்பில்லாத போதும அரசிற்கு அரசு என்ற இந்தியாவின் வெளிப்படையான கொள்கையையும் தாண்டி ஓர் இடதுசாரிக் கட்சியை இந்தியா துணிந்து பகிரங்கமாக அழைத்திருப்பது கொழும்பு ஆட்சியா



ளர்களையும் சற்று கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளதோடு அடுத்து வரும் தேர்தலில் இந்தியா ஜே.வி.பியின் பக்கம் சாய்ந்துவிடுமோ என்ற சந்தேகத்தையும் தோற்றிவித்துள்ளது.

இதேநேரம் இந்தியாவுடன் நட்புப் பாராட்டும் ஜே.வி.பி கடந்தவாரம் சீனாவின் நிவாரணப் பொதியை பெற்றுவந்து கிளிநொச்சியில் விநியோகித்துத் தனது சீன விசுவாசத்தை நிரூபித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தென்னிலங்கை அரசியல் நிலைப்பாட்டில் இந்தியாவின் போக்கில் ஏற்பட்ட அதிரடி மாற்றம் புதிய தூதுவரின் காலத்தில் தமிழர் தரப்பிலும் ஏற்படுமா என்பதே தற்போது தமிழர் தரப்பில் கேள்வியாகவுள்ளது.



# இன்றைய ராசி பலன்கள் - 07.02.2024




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். இன்று மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருப்பது சிறந்தது. தெளிவான மனதின் மூலம் இன்று உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்கலாம்.

பணியிடத்தில் சில கடினமான சவால்களை சந்திக்க நேரலாம். சூழ்நிலையை திறமையாக கையாள அல்லது தவறு நேராமல் இருக்க நீங்கள் அமைதியாக செயல்பட வேண்டும்.

உங்களின் கடுமையான தன்மை காரணமாக உங்கள் துணையுடன் பிரச்சினை ஏற்படலாம். உறவின் நல்லிணக்கத்தை பேண இத்தகைய உணர்வை தவிர்ப்பது நல்லது.

இன்று தேவையற்ற செலவுகளை சந்திக்க நேரலாம். இது உங்களுக்கு சிறிது வருத்தத்தை அளிக்கும்.




இன்று சமநிலை உணர்வு காணப்படும். உங்கள் நண்பர்கள் மற்றும் உடனிருப்பவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பொதுவாக இன்று மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

நீங்கள் பணிகளை தரமாக முடித்து தருவீர்கள். உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்ளும் சுறுசுறுப்பு உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையுடன் இனிமையாகப் பேச வாய்ப்புள்ளது. இது இருவருக்குமிடையே உறவுப் பிணைப்பை வலுப்படுத்தும்.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிக்கும் நல்ல வாய்ப்பு உள்ளது. இன்று சிறிது பணமும் சேமிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




பிரார்த்தனை மற்றும் தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் நன்மை பெறலாம். இதன் மூலம் தெளிவு கிடைக்கும். நம்பிக்கையான சிந்தனை உருவாகும்.

பணியில் உங்கள் நேர்மையான அணுகுமுறை சாதகமான பலன்களைத் தரும். பணியில் உங்களுக்கு பதவி உயர்வு கிடைக்கப் பெறலாம்.

உங்கள் துணையுடனான உங்கள் அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இது இருவருக்குமிடையே நல்ல பிணைப்பை வளர்க்க உதவும்.

இன்று அதிர்ஷ்டகரமான நிதிநிலை காணப்படுகின்றது. உங்கள் சேமிப்பை இன்று அதிகரிக்க இயலும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.




இன்றைய செயல்களை பொறுமையுடனும் சமயோசித புத்தியுடனும் மேற்கொள்ள வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் உங்கள் மனதில் குழப்பம் உண்டாக்கும். அத்தகைய உணர்வுக்கு ஆளாவதை தவிருங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இன்றைய பணிகளை முடிக்க திட்டமிட்டு செயற்பட வேண்டும்.

உங்கள் உறவில் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் துணையுடன் ஒத்துப் போக உண்மையான முயற்சி எடுக்கவும்.

இன்று பணம் சம்பாதிக்க குறைந்த வாய்ப்பே உள்ளது. பணம் சேமிப்பதும் கடினம். நிதி சம்பந்தமான விஷயங்களில் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.

சளி காரணமாக உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். நண்பர்கள் மற்றும் உடனிருப்பவர்களின் ஆலோசனையைப் பெறுங்கள்.

பணியிடத்தில் பதட்டம் காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்தால் நற்பலன் கிடைக்கும்.

உங்கள் உறவில் மனக் குழப்பம் பாதிப்பை ஏற்படுத்தும். உங்கள் கருத்துக்களை உங்கள் துணையிடம் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை பராமரிக்க தேவையற்ற செலவுகளை கண்காணியுங்கள்.

அதிக உடல் உழைப்பு காரணமாக உங்களுக்கு கால் வலி அல்லது முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உறுதி மற்றும் நம்பிக்கை உணர்வு மூலம் உங்கள் இலக்குகளை எளிதில் அடையலாம்.

பணியிடத்தில் சிறப்பான வளர்ச்சி காணப்படுகின்றது. உங்கள் பணிகளை திறமையாக துல்லியமாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் கருத்துக்களை நட்பாக பகிர்ந்து கொள்ள வேண்டும். இதனால் உங்கள் உறவில் அன்பும் மகிழ்ச்சியும் பொங்கும்.

இன்று அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது. அது உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய உதவும்.

இன்றைய நாளுக்கு தேவையான ஆற்றல் உங்களிடம் நிறைந்து காணப்படும்.




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் இன்றைய நாளை சிறந்ததாக்கலாம். அதன் மூலம் ஆறுதல் மற்றும் திருப்தி கிடைக்கும். இன்று நற்பயன் காணத் திட்டமிட்டுச் செயற்பட வேண்டும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவை பராமரிக்க இயலாது. விருப்பமில்லாத சூழ்நிலையை திறமையாகக்கையாள அமைதியாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் பழகும்போது சில கட்டுப்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அதிகம் பேசுவதை தவிர்க்க வேண்டும்.

எதிர்பாராத காரணங்களுக்காக அதிக செலவுகள் ஏற்படும். பண விஷயங்களை கண்காணியுங்கள்.

தோல் சம்பந்தமான பிரச்சினை உங்களை பாதிக்கும்.




நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். அனுசரணையான போக்கின் மூலம் நன்மை கிட்டும். தடைகள் காணப்பட்டாலும் திட்டமிட்டு செயல்பட்டால் அதனை சமாளிக்க முடியும்.

கவனக்குறைவின் காரணமாக பணியிடத்தில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உறவில் நிலவும் பிரச்சினைகள் காரணமாக உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் அமைதியாக அமர்ந்து கலந்து பேச வேண்டும்.

அதிகரிக்கும் செலவினங்களை எதிர்கொள்ள நேரும். பணத்தை கவனமாகவும் சாதுர்யமாகவும் கையாள வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.02.2024

## தனுசு

இன்று சில மாற்றங்களும் சில பயணங்களும் காணப்படும். தொண்டு நடவடிக்கைகள் மூலம் மகிழ்ச்சி கிட்டும். சாதாரண செயல்களை ஆற்றுவதில் கூட தாமதங்கள் காணப்படும்.

பணியிடத்தில் சில சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். எனவே உங்கள் பணிகளை திட்டமிட்டு திறமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் பிரச்சினை காணப்படும். அமைதியாக அதனை தீர்க்க வேண்டும்.

நிதிநிலைமையில் குறைந்த வளர்ச்சி காணப்படும். இன்று பணத்தை தக்க வைத்துக் கொள்வது கடினமாக இருக்கும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## மகரம்

இன்று உங்களுக்கு செழிப்பான நாள். தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும். உங்கள் வளர்ச்சிக்கு உதவும் தக்க முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

பணியிடத்தில் நீங்கள் எதிர்பார்த்ததை விட அதிக வளர்ச்சி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு மற்றும் பாராட்டு கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

## கும்பம்

இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும் நாள். திறமையாக திட்டமிட்டால் வெற்றி காணலாம். உங்களிடம் ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

நீங்கள் பணிகளை விரைவாக முடிக்க நேரலாம். உங்கள் பணிகளை எளிதாகக் கையாள உங்கள் நம்பிக்கை அணுகுமுறை உதவும்.

தம்பதியரிடையே பரஸ்பர மரியாதை காணப்படும். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

உங்களின் பணம் சம்பாதிக்கும் ஆற்றல் உயரும். ஸ்திரமான நிதிநிலைமைக்கான வாய்ப்பு உள்ளது.

நம்பிக்கையான மனநிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மீனம்

இன்று அவ்வளவு எளிதாக எதையும் பெற முடியாது. எனவே கவனமாகவும் உறுதியாகவும் செயல் பட வேண்டிய நாள்.

பணியைப் பொறுத்தவரை இன்று பலன் தரும் நாளாக இருக்காது. இன்று கூடுதல் பணிகள் காணப்படும். என்றாலும் நீங்கள் முறையான திட்டமிடல் மூலம் பணிகளை கையாள்வீர்கள்.

உங்கள் தாயுடனான கருத்து வேறுபாடு வீட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும். நீங்கள் சூழ்நிலையை பக்குவமாக கையாள வேண்டும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. உங்கள் ஒவ்வொரு பணத்தையும் கவனமாக செலவு செய்ய வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park



# வருமானம் குறைந்த குடும்ப மாணவர்களின் அடைவுமட்டம் வடக்கில் மிகவும் குறைவு!

**(வசந்தன்)**

வடக்கில் பொருளாதாரத்தில் நலிவடைந்த மாணவர்களின் அடைவு மட்டங்கள் மிகவும் குறைவாக இருக்கின்றன என வடமாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

வடமாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் வவுனியா நகரசபை மண்டபத்தில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது வன்னி மாவட்டங்களின் கல்வி நிலைமை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. அதில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் 2018 தொடக்கம் 2022 வரை க.பொ.த.சாதாரண மற்றும் உயர்தர பரீட்சைகளில் வடக்கு மாகாண மாணவர்களின் சித்தி விகிதங்கள் ஒப்பீடு செய்யப்பட்டன. மாணவர்களின் அடைவு மட்டங்களை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் கருத்துரைகள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன் வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை வருமானம் குறைந்த மாணவர்களின் அடைவு மட்டங்களே மிகவும் குறைவாகக் காணப்படுகின்றன. எனவே, அவர்களை இனம்கண்டு அந்த மாணவர்களின் அடைவு மட்டங்களை அதிகரிக்க வேண்டிய தேவை தொடர்பாக அறிவுறுத்தல்கள் விடுவிக்கப்பட்டன.

நிகழ்வில் கிராமிய இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், வடக்கு மாகாண ஆளுனர் எஸ்.எம்.சாள்ஸ், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் காயத்திரி அபேகுணசேகர மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக்கல்வி பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.















# 15 வீத விருதுகள் 2023இல் உயர்மட்ட விருதுகளை செலான் வங்கி வென்றது

## அன்புடன் அரவணைக்கும் வங்கி அதிக விருதுகள் பெற்ற வங்கியானது




Sri Lanka Institute of Marketing (SLIM) அண்மையில் ஏற்பாடு செய்திருந்த தேசிய விற்பனை காங்கிரஸ் விருதுகள் (NSA) 2023இல் தனது குழுவின் வெற்றியை அறிவிப்பதில் செலான் வங்கி பெருமகிழ்ச்சியடைகிறது. இறந்த விற்பனைக் கலாச்சாரத்தை வளர்ப்பதில் வங்கியின் அர்ப்பணிப்பு ஆனது செலான் வங்கியை மீண்டும் முன் நகர்த்தி இந்த மதிப்புமிக்க நிகழ்வில் அதிக விருதுகளைப் பெற்ற வங்கியாக மாற்றியுள்ளது.

அர்ப்பணிப்பு மற்றும் சிறந்த செயற் திறனுக்கு சான்றாக செலான் வங்கிக் குழு உறுப்பினர்கள் NSA 2023இல் ஏழு உயர்மட்ட விருதுகளை வென்றனர். அவர்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்பு விருது பெறுபவரின் தனிப்பட்ட திறமையை வெளிப்படுத்துவது மட்டுமன்றி செலான் வங்கியின் விற்பனைக் குழுவின் கூட்டு வலிமையை பிரதிபலிப்பதோடு தொழில்துறையில் வங்கியின் முன்னணி நிலையை உறுதுப்படுத்துகிறது.

இந்த வருடத்தின் சிறந்த சாதனையாளர்களாக Front-line பிரிவில் திரு.தனுஷ்க குணசேன வெண்கல விருதையும், விற்பனை மேற்பார்வையாளர் பிரிவில் திரு.லோச்சன ஏக்கநாயக வெள்ளி விருதையும் பெற்றனர். மேலும் திரு. மொஹமட் மபாஸ் விற்பனை நிறைவேற்றுப் பிரிவில் வெண்கல விருதையும், திரு.ஷிரான் பெரேரா மற்றும் திரு.ஜூடி ரொட்ரிகோ ஆகியோர் முறையே பிராந்திய முகாமையாளர் மற்றும் பிற விற்பனை ஆதரவு – முகாமையாளர் பிரிவுகளில் வெள்ளி விருதுகளைப் பெற்றனர். செல்வி.கமலீன் மில்ஸ் பிற விற்பனை ஆதரவு – நிறைவேற்று அல்லாத பிரிவில் Merit விருதை பெற்றதுடன் திரு.சந்தக பெர்னாண்டோ தேசிய விற்பனை முகாமையாளர் பிரிவில் வெண்கல விருதைப் பெற்றார்.

இந்த ஆண்டில் செலான் வங்கியானது NSAஇல் அதிக விருதுகளைப் பெற்ற வங்கியாக அங்கீகரிக்கப்பட்டமை சவாலான மனநிலையை வளர்ப்பதிலும் மாற்றம் மிக்க விற்பனை அரங்கில் தொடர்ச்சியான வெற்றியை பெறுவதிலும் நிறுவனத்தின் உறுதியை கோடிட்டுக் காட்டுகிறது. செலான் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரமேஷ் ஜயசேகர, குழுவின் சாதனைகள் குறித்து பெருமிதத்துடன் கருத்துத் தெரிவிக்கையில்,

“NSA 2023இல் செலான் வங்கியின் வெற்றியானது, விற்பனைத் துறையில் சிறந்து விளங்குதல் மற்றும் புதுமைக்கான எங்களின் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. எங்கள் குழுவின் சாதனைகள் குறித்து நாங்கள் பெருமிதமடைகிறோம். மேலும் இந்த அங்கீகாரம் தொழில்துறையில் செலான் வங்கியை முன்னணியில் நிறுத்துவதுடன் அதன் அர்ப்பணிப்பு மற்றும் ஆர்வத்தை பிரதிபலிக்கிறது.” என்றார்.

SLIM NSA இல் தொடர்ந்து பல வருடங்களாக செலான் வங்கியின் வெற்றியானது கல்வி, முன்னேற்றம் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்கான அதன் அர்ப்பணிப்பிற்கு சான்றாகும். இது ஊழியர்களுக்கு தொழில் நெறிமுறைகளில் இறந்து விளங்குவதற்கான சூழலை உருவாக்குகிறது. இவ்வருட விருதுகளில் வங்கியின் வெற்றியானது இலங்கையின் வங்கத் துறையில் செலான் வங்கியை முன்னணி வங்கியாக அதன் நிலையை உறுதிப்படுத்துகிறது.

### செலான் வங்கி தொடர்பாக

அன்புடன் அரவணைக்கும் வங்கியான செலான் வங்கி, அதுநவீன தொழில்நுட்பம், புதுமையான தயாரிப்புகள் மற்றும் இறந்த தரமான சேவைகள் மூலம் அதன் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு அதிசிறந்த வங்கி அனுபவத்தை வழங்கும் தொலைநோக்குப் பார்வையுடன் செயற்படுகிறது. சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள், தனிநபர் வங்கிச் சேவை மற்றும் பெருநிறுவன வாடிக்கையாளர்கள் உள்ளடங்கலாக வாடிக்கையாளர்களை கொண்டுள்ள இவ்வங்கி, நாடு முழுவதும் 540ற்கும் மேற்பட்ட அணுகல் புள்ளிகளைக் கொண்டுள்ளது. செலான் வங்கியானது நிதி ரீதியாக நிலையான மற்றும் சிறந்த செயற்திறன் மிக்க நிறுவனமாக Fitch Ratings நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், வங்கியின் தேசிய நீண்டகால மதிப்பீடு ‘A-’(lka) வாக இருத்தியமைக்கப்பட்டுள்ளது. இவை செலான் வங்கியின் நித ஸ்திரத்தன்மை மற்றும் அனைத்து அம்சங்களிலும் நிலையான சேவை வழங்கலை உறுது செய்வதில் அதன் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு சான்றாகும்.




# மக்கள் வங்கியிடமிருந்து சுதந்திரதின வாரத்தில் பிறக்கின்ற குழந்தைகளுக்கு ‘இசுரு உதான’ பரிசு சான்றிதழ்கள்



ஒவ்வொரு ஆண்டும், சுதந்திர தினத்துடன் இணைந்ததாக மக்கள் வங்கியின் ‘சுதந்திரத்தின் உதயம்’ நிகழ்ச்சித் திட்டம் நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன்படி, 2024 பெப்ரவரி 04 ஆம் திகதி காலை 9.30 மணி முதல் மக்கள் வங்கியின் தலைவர் திரு. சுஜீவ ராஜபக்ஷ மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர் திரு. கிளைவ் பொன்சேகா ஆகியோர் முன்னிலையில் பொரளை காசல் வீதி மகளிர் வைத்தியசாலையிலும், பொரளை டி சொய்சா மகளிர் வைத்தியசாலையிலும் இதன் அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெறவுள்ளது.

மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (தனிநபர் வங்கிச்சேவை) திரு. நளின் பத்திரனகே அவர்கள் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தார்.

தாய்நாட்டின் குழந்தைகளுக்கு சிறந்த எதிர்காலத்திற்கான பாதையை உருவாக்குவதற்கு தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்படும் மக்கள் வங்கி, பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திர தினத்தின் கருப்பொருளாக ‘சுதந்திரத்தின் உதயம்’ என்ற நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தயார் செய்துள்ளது. மக்கள் வங்கி 2006 ஆம் ஆண்டு முதல் தற்போது 17 ஆவது தடவையாக இந்த இலவச நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுக்கின்றது.

பெப்ரவரி 01 முதல் 14 வரையிலான பதினைந்து நாட்களில் பிறக்கின்ற குழந்தைகளை இலக்காகக் கொண்டு இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்படி எமது ஊழியர்கள் தங்கள் பகுதிக்கு உரிய வைத்தியசாலைகளுக்குச் சென்று புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான பரிசுகளை வைத்தியசாலை ஊழியர்களின் ஆதரவுடன் வழங்குவார்கள். ரூபா 2000 பெறுமதியான இசுரு உதான சான்றிதழ் பரிசாக வழங்கப்படும்.

பெற்றோர் / பாதுகாவலர் இந்த பரிசு சான்றிதழ் மற்றும் குழந்தையின் பிறப்பை உறுதிப்படுத்தும் ஆவணங்களை அருகில் உள்ள மக்கள் வங்கி கிளையில் சமர்ப்பிக்கும் போது, பரிசு சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பை கணக்கில் வரவு வைத்து குழந்தையின் பெயரில் இசுரு உதான கணக்கை நாம் ஆரம்பிப்போம்.

சேமிக்கும் பழக்கத்தை குழந்தைகளுக்கு கற்றுக் கொடுப்பதில் முன்னோடியாகத் திகழும் மக்கள் வங்கி, 1998 ஆம் ஆண்டில் பிறப்பிலிருந்து 5 வயது வரையிலான குழந்தைகளுக்காக இசுரு உதான கணக்கை அறிமுகப்படுத்தியது. அங்கு, ‘குழந்தைக்கு வழங்கக்கூடிய புத்திசாலித்தனமான பரிசு’ என்ற தொனிப்பொருளில், பல்வேறு பெறுமதிகள் கொண்ட இசுரு உதான பரிசுச் சான்றிதழ்களை அறிமுகப்படுத்தினோம். அதன் மூலம், பெரியவர்களை பௌதிக ரீதியான பரிசுகளை எடுத்துச் செல்வதற்குப் பதிலாக குழந்தைக்காகச் சேமிக்கப் பழகுவதைத் தூண்டுவதே எங்களின் பிரதான குறிக்கோளாக இருந்தது. இந்த இசுரு உதான சேமிப்புக் கணக்குகளில் பணத்தைச் சேமிக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் வழங்கப்படும் விசேட வட்டிக்கு மேலதிகமாக, அதிகரித்து வரும் கணக்கின் மீதிக்கு ஏற்ப பல கவர்ச்சிகரமான பரிசுகளை வழங்கி குழந்தைகள் சேமிப்பதை ஊக்குவிப்பதை நாம் எதிர்பார்க்கிறோம்.

அதற்கிணங்க, நாட்டின் முன்னேற்றத்திற்காக தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயற்படும் மக்கள் வங்கி, எதிர்கால அபிவிருத்தியை அடைவதற்காக ஒரு குழந்தைக்கு வழங்கக்கூடிய அறிவுபூர்வமான பரிசை வழங்கி உண்மையான சுதந்திரத்தின் அர்த்தத்தை உருவாக்க பாடுபடுவதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது. நிதி ஸ்திரத்தன்மை மூலம் குழந்தைகளின் எதிர்காலம் பிரகாசிக்கும்’.




# மிஸ்ட்ரால் தனது 55ஆவது ஆண்டு விழாவை அபான்ஸ் உடன் கொண்டாடுகிறது




உலகின் முதல்தர வீட்டுப்பாவனை மின் உற்பத்தியான மிஸ்ட்ரால் தனது 55ஆவது ஆண்டுவிழாவை அண்மையில் கொண்டாடியது. இந்த விசேட நிகழ்வை கொண்டாடும் வகையில் இலங்கையில் மிஸ்ட்ரால் உற்பத்திகளுக்கான அங்கீகாரம் கொண்ட விற்பனை முகவரான அபான்ஸ் நிறுவனத்தினால் 2023 நவம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய மாதங்களில் மிஸ்ட்ரால் உற்பத்திகளை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு விசேட சீட்டிழுப்பு நடத்தப்பட்டது. 2024 ஜனவரி 19ஆம் திகதி Courtyard by Marriott ஹோட்டலில் இந்த விசேட நிகழ்வு இடம்பெற்றது.

அபான்ஸ் காட்சியறைகளில் மற்றும் BuyAbans.com இடமிருந்து மிஸ்ட்ரால் உற்பத்திகளை கொள்வனவு செய்த வாடிக்கையாளர்களை இணைத்துக்கொணடே இந்த விசேட சீட்டிழுப்பு நடத்தப்பட்டது. இந்த சீட்டிழுப்பில் 55 வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் 2 வெற்றியாளர்களுக்கு Courtyard by Marriott ஹோட்டலில் மேலும் 2 பேருடன் இரவு உணவை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. இறுதிச் சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற திருமதி. ஷிரன்தி பெரேரா அவர்களுக்கு ரூ. 555,555.55/- பணப்பரிசு வழங்கப்பட்டது. இந்த நிகழ்வுக்கு மிஸ்ட்ரால் நிறுவனத்தை பிரதிநிதித்துவப் படுத்தி திரு. Lim Ching Siang Frank அவர்களும் அபான்ஸ் நிறுவனத்தின் சார்பாக பணிப்பாளர் குழு அங்கத்தவர்களான கலாநிதி. சரோஷி துபாஷ், திருமதி. டனாஸ் பெஸ்டோன்ஜி மற்றும் திரு. மத்தியூ ரோச்சி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

Coutyard by Marriott இல் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கேள்விகளுக்கு பதில் வழங்கும் Q&A அசம்சம் ஒன்றும் இடம்பெற்றது. மேலும் பங்கேற்றவர்களுக்கு சிறப்பு நிகழ்வுகளும் இதன்போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஸ்மார்ட் ஃபோன், எயார் கூலர்களுடன் மேலும் பல ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பங்கேற்ற அனைவருக்கும் மகிழ்ச்சி, ஆனந்தம் நிறைந்த ஒரு சிறப்பான அனுபவத்தை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்தது.

1968ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மிஸ்ட்ரால் நிறுவனம் உயர் தரத்திலான சமையலறை உபகரணங்களுக்காக முதன்மையான விற்பனை நாமமாக திகழ்ந்துள்ளது. தமது நிறுவனத்திற்கு சொந்தமான விற்பனை நாமங்களான மிஸ்ட்ரால் மற்றும் மயர் போன்ற விற்பனை நாமங்களிலான தயாரிப்புகள் நவீனத்துவம், உயர் தரம் மற்றும் நீடித்த உழைப்புடன் மிகச் சிறந்த விலையில் பெற்றுக் கொள்ளுங்கள். சமையலறை பணிகளில் புதிய புரட்சியை ஏற்படுத்தி உங்கள் வாழ்வில் புதிய மாற்றத்தை உருவாக்குவதே மிஸ்ட்ரால் உற்பத்திகளின் நோக்கமாகும். நீங்கள் சமையலுக்கு புதியவராக இருந்தாலும், நன்றாக சமைக்க தெரிந்தவராக இருந்தாலும் அன்றாட உணவுகள் மற்றும் விசேட உணவுகளை மிஸ்ட்ரால் உபகரணங்களில் மிகவும் இலகுவாக சமைத்திடுங்கள்.

மிஸ்ட்ரால் உற்பத்திகள் அவுஸ்திரேலியாவின் உற்பத்தியாக 55 வருடங்களுக்கு மேலான ஒரு நட்பெயரை கொண்டுள்ளதுடன் விசிறிகள், எயார் கூலர்கள், இன்ஸ்டன்ட் ஷவர் ஹீட்டர் உள்ளிட்ட நவீன உற்பத்திகள் வாடிக்கையாளர்களின் கரங்களுக்கு கிடைக்கிறது. உங்கள் இல்லத்தின் தேவைகளுக்கு முழுமையான வீட்டுப்பாவனை உபகரணங்களை மிஸ்ட்ரால் அறிமுகம் செய்துள்ளது. உங்கள் இல்லத்திற்கு தேவையான வீட்டுப்பாவனை உபகரணங்களை மிஸ்ட்ரால் அறிமுகம் செய்துள்ளது. குடும்பத்தில் அனைவருக்கும் தேவையான உற்பத்திகளை வழங்கி ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதற்கு மிஸ்ட்ரால் வீட்டுப்பாவனை மின் உபகரணங்கள் மிகவும் உதவியாக அமைந்துள்ளது. தமது உற்பத்திகள் மற்றும் சேவைகள் ஊடாக குடும்பங்கள் மற்றும் வாழ்க்கைக்கு சொகுசு வழங்குவதற்கு மிஸ்ட்ரால் உருதுணையாக இருப்பதோடு, சகலருக்கும் ஆரோக்கியமான நளைய தினத்தை உருவாக்கும் நோக்கில் மிஸ்ட்ரால் செயலாற்றி வருகிறது.

மிஸ்ட்ரால் உற்பத்திகளுக்கு இலங்கையிலுள்ள அங்கீகாரம் கொண்ட விற்பனை முகவரான அபான்ஸ் நிறுவனம் எயார் பிரையர், இலெக்ட்ரிக் அவன், ரைஸ் குக்கர், பிளெண்டர், இண்டக்ஷன் குக்கர், ஃபுட் புரோஸஸர், மின் விசிறிகள், எயார் கூலர்கள், வாட்டர் ஹீட்டர்கள், மற்றும் கீஸர்கள் உள்ளிட்ட உற்பத்திகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகிறது. நவீன மிஸ்ட்ரால் உற்பத்திகள் நாடளாவிய ரீதியில் அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் மற்றும் BuyAbans.com இடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்.




# பணியாளர்களின் சாதனைகளை கவர்ச்சியான விருது வழங்கும் நிகழ்வில் கௌரவித்த SLIIT















SLIIT இன் கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாளர்களின் கடும் உழைப்பு மற்றும் சாதனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வான SLIIT பணியாளர் விருது இரவு 2023 நிகழ்வு மூன்று வருட இடைவெளியின் பின்னர் வெற்றிகரமா இடம்பெற்றது. அங்கீகாரம், பொழுதுபோக்கு மற்றும் தோழமை நிறைந்த மறக்க முடியாத அனுபவங்களை வழங்கிய இந்த நிகழ்வு 2023ஆம் ஆண்டு டிசம்பர் 08ஆம் திகதி மாலை கொழும்பு ரமடா ஹோட்டலில் நடைபெற்றது.

உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட நோய் தொற்றுக் காரணமாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்படாத நிலையில் தமது சக பணியாளர்களின் இணையற்ற செயல்திறன் மற்றும் அவர்களின் அர்ப்பணிப்பைக் கௌரவிக்கவும், மீண்டும் ஒன்றிணையும் ஆர்வத்துடனும் 400 பேர் இதில் கலந்துகொண்டனர். தொற்றுநோய் காலப்பகுதியில் எதிர்கொண்ட கணிசமான சவால்களைக் கையாழ்வதற்குப் பங்களிப்புச் செலுத்திய பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட அரங்கு நிறைந்த கரகோசம் SLIIT இன் பணியாளர் சமூகத்தின் போராடும் திறன் மற்றும் அர்ப்பணிப்பைப் பறைசாற்றும் வகையில் அமைந்திருந்தன.

கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாளர்களுக்கு மூன்று பிரதான பிரிவுகளின் கீழ் விருதுகள் வழங்கப்பட்டு கொண்டாடப்பட்டதுடன், ஒவ்வொரு பிரிவும் மதிப்புவாய்ந்த நபர்கள் வழங்கிய பங்களிப்பை பல்வேறு நோக்கங்களில் கோடிட்டுக்காட்டும் வகையில் அமைந்தன. வருடத்துக்கான சிறந்த ஆய்வாளர், சிறந்த ஆசிரியர், சிறந்த ஒட்டுமொத்த திறமையாளர் என்ற பிரிவுகளின் கீழ் ஒவ்வொரு மட்டத்திலும் விருதுகள் வழங்கப்பட்டன.

ஏ–பிரிவின் வெற்றியாளர்களில் ஆண்டின் சிறந்த ஆய்வாளர் விருது – நில்மினி ரத்னாயக்க, SLIIT வணிகத் துறையின் விரிவுரையாளர், சிறந்த ஆசிரியர் விருது – ஷனித மிரிஹான, மனிதநேய மற்றும் விஞ்ஞான பீடத்தின் உதவி விரிவுரையாளர் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

பி–பிரிவில் ஆண்டின் சிறந்த ஆய்வாளர் மற்றும் சிறந்த ஆசிரியர் விருது கலாநிதி சரித ஜயகுரு, மனிதநேயம் மற்றும் விஞ்ஞான பீடத்தின் உதவிப் பேராசிரியருக்கு வழங்கப்பட்டதுடன், சிறந்த ஒட்டுமொத்த திறமையாளர் விருது கலாநிதி அநுராதா ஜயகொடி, கணினிப் பீடத்தின் உதவிப் பேராசிரியக்கு வழங்கப்பட்டது.

சி–பிரிவில் ஆண்டின் சிறந்த ஆய்வாளர் விருது – பேராசிரியர் ருவன் ஜயதிலக, SLIIT வணிகத் துறையின் பேராசிரியர், சிறந்த ஆசிரியர் விருது – பேராசிரியர் ஷ்ரியானி பீரிஸ், மனிதநேயம் மற்றும் விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் மற்றும் ஒட்டுமொத்த திறமையாளர் விருது பேராசிரியர் ருவன் ஜயதிலக, SLIIT வணிகத் துறையின் பேராசிரியர் ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

கல்விசாரா பணியாளர்களுக்கான விருதுகளில் ஏ பிரிவில் சிறந்த செயல்திறன் கொண்டவர் விருது – எம்.ஏ.ரத்னசிறி, வசதி முகாமைத்துவப் பிரிவு, பி பிரிவில், சிறந்த செயல்திறன் கொண்டவர் விருது – லஹிரு மதுஷங்க, முகாமைத்துவத் திணைக்களம், சி பிரிவில் சிறந்த செயல்திறன் கொண்டவர் விருது – புஷமல பெரேரா, சிரேஷ்ட நூலகர் ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

நடன நிழ்வு, இசை மற்றும் பெறுமதி மிக்க பல்வேறு பரிசுகளைக் கொண்ட விறுவிறுப்பான அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு ஆகியவற்றுடன் இரவு நிகழ்வு தொடர்ந்தது.

அங்கீகாரம், வளர்ச்சி மற்றும் சிறந்த உணர்வை வளர்ப்பதற்கான சூழலைத் தொடர்ந்தும் முன்கொண்டு செல்வதற்குப் பணியாளர்கள் ஒருவருக்கு ஒருவர் வெளிக்காட்டிய சாதனைகளைப் அவர்களுடன் இணைந்து நினைவுகூறும் நிகழ்வாக SLIIT பணியாளர் விருது இரவு 2023 அமைந்தது.




# SriLanka Insurance celebrates Thai Pongal



Sri Lanka Insurance recently celebrated Thai Pongal with a heartwarming event that highlighted the company's commitment to diversity and inclusivity. The festivities, organized by the SLIC Hindu Society, took place on January 22, 2024, at the Sri Lanka Insurance head office.

The event was a vibrant showcase of traditions and culture, featuring the active participation of corporate management, senior management and staff members from various backgrounds. Thai Pongal, a significant harvest festival celebrated by the Tamil community, provided a unique opportunity for employees to come together and share in the joy of this cultural celebration.